DINATHANTHI 24 FEB 2010

குள்ளம்பாளையத்தில்

# இலவச மருத்துவ முகாம்

கோபிசெட்டிபாளையம், பிப்.24–

கோபி அருகே உள்ள குள்ளம் பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. கோவை ஈஷா யோக மையத்தின் ஆரோக்கிய அலை அமைப்பு மற்றும் அ.தி.மு.க இளைஞர் பாசறை ஆகியவை சார்பில் நடைபெற்ற இந்த முகாமிற்கு காளியப்பன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

இதில் டாக்டர்கள் மீனாட்சி, விமலன், சிவக்குமார், சங்கீதா, தங்கதுரை ஆகியோர் கலந்துகொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தனர். ரத்தம், சிறுநீர் பரிசோதனை உள்பட பல்வேறு பரிசோதனைகள் செய்து சிகிச்சை அளிக்கப்பட்டன. கோபி, குள்ளம்பாளையம், பொலவக்காளிபாளையம், ஒத்தக்குதிரை உள்பட சுற்று வட்டார பகுதிகளில் இருந்து 250–க்கும் மேற்பட்டோர் முகாமில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.